தினமணி

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 80.28 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 80.28 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடியாகும். அணைக்கு விநாடிக்கு 1,938 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன அடி நீரும், வாய்க்காலில் 2,400 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டன. அணையில் நீர்இருப்பு 15.83 டி.எம்.சி. ஆகும்.

## 20-ல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், இம் மாதம் 20-ம் தேதி நடைபெறுகிறது.

ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அரசின் அனைத்துத் துறை அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் அளித்துப் பேசுகின்றனர். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களின் குறைகளைத் தெரிவித்து தீர்வு காணலாம். மனுக்கள் அனுப்பலாம்: விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை மனுக்கள் மூலமாகவும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத்துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் இம்மாதம் 15-ம் தேதிக்குள் கோரிக்கை மனுக்களை போடலாம்.

இம் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 20-ம் தேதி நடைபெறும் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## வயல்களில் வேளாண் துணை இயக்குநர் ஆய்வு

திருவண்ணாமலையை அடுத்த தலையாம்பள்ளம் கிராமத்தில் விவசாயிகள் பிரபாகரன், ஆண்டாள், நாராயணன் ஆகியோரின் வயல்களில் பயிரிடப்பட்டுள்ள நெல், நரியாம்பட்டு சம்பத் வயலில் பயிரிடப்பட்டுள்ள மணிலா, டி.வலசை கிராமத்தில் தணிகாசலம் பயிரிட்டுள்ள மணிலா ஆகிய வயல்களை துணை இயக்குநர் கிருஷ்ணராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.மேலும், இவ் வயல்களில் அதிக மகசூல் பெற விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் அறிவுரை வழங்கினார்.

ஆய்வின்போது, வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி, வேளாண்மை அலுவலர் ஜெ.சுந்தரமூர்த்தி, உதவி விதை அலுவலர் வேலு, உதவி வேளாண்மை அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.40, சென்னையில்

ரூ. 3.43.

கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.70, முட்டைக் கோழி கிலோ ரூ.60.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீபெரும்புதூர்:ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், மதுரமங்கலம், ராமானுஜபுரம், அக்கமாபுரம்,

சிங்கிலிபாடி, கொடம நல்லூர், மேல்மதுரமங்கலம், பிச்சிவாக்கம், பட்டுமுடையார்-குப்பம், கோட்டுர், எடையார்பாக்கம் ஆகிய கிராமங்களில் விவசாயம் செய்கின்றனர். ஏரி-களில் தண்ணீர் இல்லாததால், மானாவாரியில் நெல், 2,000 ஏக்கரில் பயரிடப்பட்டு, மழைக்காக காத்திருந்தனர். நேற்று அதிகாலை, 2:00 மணிக்கு, பலத்த இடி, மின்னல் உடன், பலத்த மழை கொட்டியது. இந்த மழையால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மதுரமங்கலம் விவசாயி ராமதாஸ் கூறுகையில், “ஆடிமாதம், விதை நாற்றங்கால் மூலம், நாற்று விட்டு, விவசாயம் செய்து வந்தோம். பருவ மழை குறைவால், நாற்றங்கால் மூலம் பயிர் செய்வதை நிறுத்தி, மானாவாரி விதை நெல் சாகுபடி முறையில், பயர் செய்ய துவங்கினோம். மழை குறைவால், இவ்வாண்டு கடந்த, 20 நாட்களுக்கு முன்-புதான், நெல் விதைக்கப்பட்டது. கடுமையான வெயிலின் தாக்கத்தால், நெல் முளைப்பு பாதிக்கப்படும் என, அஞ்சி இருந்தோம். இந்நிலையில், மழை பெய்தது பெரும் மகிழ்ச்-சியை தருகிறது,சு என்றார்.

## பூண்டி நீர் தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஊத்துக்கோட்டை:நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கன மழையால், பூண்டி நீர்த்தேக்-கத்திற்கு வினாடிக்கு, 590 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் பெய்த கனமழையால், பூண்டி நீர் தேக்கத்-திற்கு, தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, நீர் தேக்கத்-திற்கு, மழைநீர் வினாடிக்கு, 438 கன அடியும், கிருஷ்ணா நீர் வினாடிக்கு, 152 கன அடியு-மாக சேர்த்து, 590 கன அடி வீதம் வருகிறது. நீர் தேக்கத்தில் தற்போது, 319 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. அங்கிருந்து, இணைப்பு கால்வாய் மற்றும் பேபி கால்வாய்-களில் வினாடிக்கு, 231 கன அடி வீதம் சென்னை புழலேரிக்கு செல்கிறது. ஊத்துக்-கோட்டை ஜீரோ பாயின்டில், வினாடிக்கு, 192 கன அடி வீதம் கிருஷ்ணா நீர் வருகிறது. இதுவரை தமிழகத்திற்கு, 883 மில்லியன் கன அடி நீர் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நெல் அறுவடை பாதிப்பு: விவசாயிகள் கவலை

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக விளைந்து தயாராக உள்ள நெல்லை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் பல இடங்களில் கிணறு மற்றும் போர்வெல்கள் மூலம் பயிரிடும் விவசாயிகள், கடந்த ஜூன் மாதத்தில் நெல் நடவு பணிகளை துவக்கினர். அப்போது நடவு செய்த நெல், தற்போது நன்கு விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளது.இருப்பினும் ஒரு வாரமாக மாவட்டம் முழுவதும் நல்ல

மழை பெய்து தண்ணீர் தேங்கி உள்ளது. இதே போல் அறுவடைக்கு தயாராக உள்ள நெல் வயல்களிலும் மழை நீர் தேங்கி நிற்பதால், விளைந்த நெல் பயிர்கள் முழுவதும் வயலில் சாய்ந்து கிடக்கிறது. இதனால் முற்றிய நெல் கதிர்கள், நீரில் நனைந்து முளைக்கும் அபாயம் ஏற்பட்டு விடும். விவசாயிகள் பலர் கவலை அடைந்துள்ளனர்.விழுப்புரத்தை ஒட்டியுள்ள பாணாம்பட்டு, சாலையம்பாளையம், வாணியம் பாளையம் பகுதிகளில் பல விவசாயிகள் பாதித்துள்ளனர்.

### கோலியனூரில் மஞ்சள் சாகுபடி

விழுப்புரம்:கோலியனூர் பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.மலைப் பகுதிகளை ஒட்டியுள்ள நிலப்பரப்பு மற்றும் வடிகால் வசதியுள்ள நிலங்களில் மட்டும் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள சில பகுதிகளில் மஞ்சள் சாகுபடி செய்கின்றனர். கடந்தாண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் 15 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது.விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் நெல் பயிர் சாகுபடியை படிப்படியாக குறைத்து கரும்பு, மஞ்சள், மரவள்ளி மற்றும் மலர் சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இந்த பயிர்கள் சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது. கோலியனூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

### சம்பா சாகுபடி பணி துவக்கம்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் சம்பா போக நெல் நடவிற்கான பணிகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர். மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக அவ்வப்போது பருவ மழை பெய்து வருகிறது. இதனால் கிணறு மற்றும் போர்வெல்களில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி கடந்த ஆடிப் பட்டத்தில் சம்பா போகத்திற்கான வெள்ளை பொன்னி, டீலக்ஸ் பொன்னி, டி.கே.9., உள்ளிட்ட நெல் ரகங்களை விவசாயிகள் நாற்று விட்டுள்ளனர். நாற்றுகள் வளர்ந்து, நடவு செய்யும் பக்குவத்தை அடைந்துள்ளது.இதனால் வளவனூர், சாலையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நிலங்களை டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் மூலம் உழுது, நெல் நடவு செய்ய தயார் படுத்தி வருகின்றனர்.

### ஆம்பூர் முல்லை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

விழுப்புரம்: கூடுதல் மகசூல் மற்றும் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் பலரும் ஆம்பூர் முல்லை சாகுபடியில், அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.விவசாய பகுதியான விழுப்புரம் மாவட்டத்தில் நெல், மணிலா, கரும்பு மற்றும் கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானியங்கள் மட்டுமே வழக்கமாக விவசாயிகள் பயிர் செய்தனர். ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும் மற்றும் பாசன வசதி குறைந்த இடங்களிலும் மலர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் நிலத்தின் ஒரு பகுதியில் 10 சென்ட் முதல் ஒரு ஏக்கர் பரப்பு வரையில் மலர் சாகுபடி செய்கின்றனர்.பூச்செடிகள் நடவு செய்து மூன்று மாதம் முதல் அறுவடை துவங்குகின்றன. தினமும் காலை நேரத்தில் குறைந்த ஆட்கள் மூலம் பூக்கள் பறித்து, உள்ளூர் மற்றும் அருகிலுள்ள நகரப் பகுதிகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்து பணம் பெறுகின்றனர். பூச்செடிகள் ஒரு முறை நடவு செய்தால், பத்து ஆண்டுகள் வரையில் தொடர்ந்து பராமரிப்பு செய்து, சாகுபடி செய்யலாம்.முல்லை, மல்லி, கனகாம்பரம், சாமாந்தி, கோழிக்கொண்டை, ரோஜா செடிகளை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். இதில் ஆம்பூர் முல்லை வகைச் செடிகளிலிருந்து கூடுதல் பூக்கள் கிடைப்பதாலும், அதிக விலை கிடைப்பதாலும் வெட்டுக்காடு, குச்சிப்பாளையம், மதுரபாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் இவ்வகை மலர் சாகுபடியில் கூடுதல் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

### சவுக்கில் ஊடு பயிராகமணிலா சாகுபடி தீவிரம்

விழுப்புரம்:விழுப்புரம் அடுத்த முத்தாம்பாளையத்தில், சவுக்கு நடவு செய்யப்பட்ட வயலில் ஊடு பயிராக மணிலா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.முத்தாம்பாளையத்தை சேர்ந்த விவசாயி குமார் என்பவர், ஒரு ஏக்கர் பரப்பளவில் சவுக்கு நடவு செய்துள்ளார். இந்த சவுக்கு கன்றுகள் மூன்றடி உயரம் வரை வளர்ந்துள்ளது. இதில் தற்போது ஆடிப்பட்ட விதைப்பாக மணிலா பயிர் செய்யப்பட்டுள்ளது.இந்த மணிலா வரும் டிச., மாதத்தில் அறுவடை செய்யப்படும். இவ்வாறு சவுக்கில் ஊடு பயிராக மணிலா சாகுபடி செய்வதால், களைகள் குறைந்து சவுக்கு நன்றாக வளரும். அதேபோல் மணிலாவிற்கு இடப்படும் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் சவுக்கு வளர்ச்சிக்கும் பயன்படுகிறது. இதனால் சவுக்கு கன்றுகள் விரைவாகவும், நோய்த் தாக்குதலின்றி நன்றாக வளர்கிறது. சவுக்கு நடவு செய்ய ஆகும் செலவுத் தொகை முழுவதும், ஊடு பயிராக சாகுபடி

செய்யப்படும் மணிலா மூலமாக கிடைக்கும் லாபம் ஈடு செய்துவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைப்பதால் சவுக்கில், மணிலா, உளுந்து பயிர்களை ஊடு பயிராக சாகுபடி செய்யப்படுகின்றன.

## நெல் பயிர் நட சணப்பை சாகுபடி

திண்டிவனம்:திண்டிவனம் அடுத்த சாரம் பகுதியில் நெல் நடவு செய்வதற்காக விவசாயிகள் சணப்பை பயிர் செய்துள்ளனர்.திண்டிவனம் பகுதியில் கடந்த மாதம் பெய்த கன மழையால் விவசாயிகள் நெல் பயிர் நடவு செய்ய நிலங்களில் தழைச்சத்து வேண்டி சணப்பை பயிர் மற்றும் நெல் நாற்று விட்டுள்ளனர். நெல் பயிர் நடவு செய்ய தேவையான மழை பெய்யாததால் நடவு பணியை விவசாயிகள் மேற்கொள்ள முடியவில்லை. நடவு செய்வதற்கு தேவையான அளவிற்கு சணப்பை செடிகள், நெல் நாற்று வளர்ந்து விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒரு வரத்தில் மழை பெய்யவில்லையென்றால் ஆடு, மாடுகளை விட்டு மேய்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

## பூ மார்க்கெட் அமைக்க வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை

ஆத்தூர்: ஆத்தூர் பகுதிகளில், பூக்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், உள்ளூரில் மார்க்கெட் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர். ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளான, ஆத்தூர், நரசிங்கபுரம், தலைவாசல், மணிவிழுந்தான், காட்டுக்கோட்டை, வீரகனூர், சிறுவாச்சூர், வரகூர், ஊனத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி, தம்மம்பட்டி, ஏத்தாப்பூர் உள்பட, 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், அதிகளவில் பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில், 200 ஏக்கருக்கு மேல், சம்பங்கி, ரோஜா, பட்டன் ரோஜா, துளுக்க சாமந்தி, குண்டு மல்லி, சன்ன மல்லி, ஜாதி மல்லி, கனகாம்பரம், பந்து பூ, வாடா மல்லி, கோழிக் கொண்டை போன்ற பூக்கள், சாகுபடி செய்யப்படுகிறது. இதில், தினமும் ஒரு டன்னுக்கு மேல், பூக்கள் உற்பத்தியாகிறது. பூ சாகுபடியில், கணிசமான வருவாய் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வம் காரணமாக, பூ சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது. ஆத்தூர், தலைவாசல் பகுதியில், பூக்கள் விற்பனை செய்ய மார்க்கெட் இல்லாததால், பூக்களை பறித்து எடுத்துக் கொண்டு, ஆத்தூர் பூ வியாபாரிகள், சேலம் பூ மார்க்கெட்டுக்கு, எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு, விளை நிலத்தில், தினமும் பூக்கும் பூக்களை, அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் பறித்து, இரு சக்கர வாகனங்களிலும், பஸ் மூலமாகவும், வெளியூர்களுக்கு எடுத்துச் சென்று, விற்பனை

செய்கின்றனர். குறிப்பிட்ட நேரத்துக்குள் செல்ல முடியாததால், பூக்கள் வாடியும், "மொக்கு' நிலையில் விற்பனை செய்யப்படும் குண்டு மல்லி, சன்ன மல்லி, ஜாதி மல்லி போன்ற பூக்கள், மலர்ந்து விடுவதால், அடிக்கடி குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் சூழல் உள்ளது. திருமணம், கோவில் திருவிழா மற்றும் பண்டிகை காலத்தில், பூ வியாபாரிகள், அதிகளவில் பூக்கள் வாங்கிக் கொள்கின்றனர். மற்ற நேரத்தில், குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே பூக்கள் வாங்கிக் கொள்வதால், அறுவடை செய்த பூக்களை விற்பனை செய்ய முடியாமல், விவசாயிகள் தவிக்கின்றனர். பூ வியாபாரிகள், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பூக்களுக்கு, குறைந்த விலை கொடுப்பதும், சீஸன் நாட்களில் கூடுதல் விலை கொடுத்து, பூக்கள் வாங்குகின்றனர். எனவே, ஆத்தூர் நகர் பகுதியில், பூ மார்க்கெட் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பூ சாகுபடி விவசாயிகள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மழையால் வரவு குறைவு: தக்காளி விலை உயர்வு

தர்மபுரி: தொடரும் மழையால், சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்தது. விலை உயர்ந்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டும் பயிர்களில் தக்காளி முக்கிய பங்கு வகித்து வருகிறது. தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உட்பட மாவட்டம் முழுவதும் விவசாயிகள், 20 ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்து வந்தனர். மாவட்டத்தில் போதிய பருவ மழையில்லாததாலும், போதிய பாசன வசதியின்றியும் விவசாயிகள் இந்தாண்டு தக்காளி சாகுபடி பரப்பளவை, 5,000 ஏக்கராக குறைத்தனர். கடந்த சில மாதங்களுக்கு சந்தைக்கு வரும் தக்காளி வரத்து குறைந்தாலும், தர்மபுரி மற்றும் பாலக்கோடு தக்காளி சந்தையில் இருந்து சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, கேரளா ஆகிய பகுதிகளுக்கு தக்காளி அதிகளவு விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டதால், ஒரு கிலோ தக்காளி, 35 ரூபாய் வரை விற்பனையானது. தென்மாவட்டங்களில் தக்காளி வரத்து துவங்கியதாலும், தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி வரத்து அதிகரித்ததாலும் தக்காளி விலை, ஒரு கிலோ, ஆறு ரூபாய் வரை குறைந்தது. இந்நிலையில் தர்மபுரி மாவட்டம் உட்பட தமிழகம் முழுவதும் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் தக்காளியில் வெடிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால், கடந்த சில தினங்களாக சந்தை தக்காளி வரத்து குறைந்துள்ளதுடன், விலையும் உயர்ந்துள்ளது. நேற்று (செப்., 11) ஒருகிலோ தக்காளி, 15 ரூபாய்க்கு விற்பனையானது. மேலும்

பருவமழை நம்பி தக்காளி சாகுபடியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் தற்போது பயிர்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து வேளாண் துணை இயக்குனர் கலைச்செல்வி கூறியது: தற்போது பெய்து வரும் மழையை தொடர்ந்து விவசாயிகள் தக்காளி செடிகளுக்கு மண் அனைத்து அவற்றை பாதுகாக்க வேண்டும். மேலும் தாழ்வான பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் தண்ணீர் அதிகளவில் தேங்குவதை தடுக்க வேண்டும். தக்காளி செடிகள் மற்றும் செடிகளில் உள்ள காய்கள் தண்ணீரில் அழுகுவதை தடுக்க தக்காளி செடிகள் அருகில் குச்சிகளை நட்டு, அதில் செடிகளை உயர்த்தி கட்ட வேண்டும். இதனால் தக்காளி செடிகள் மற்றும் காய்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்படும். மேலும் தக்காளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலர்களின் பரிந்துரையின் படி உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்து, அதிகளவில் தக்காளி சாகுபடி பெறலாம். இவ்வாறு கூறினார்.

### வெண்பன்றி வளர்ப்பு விவசாயிகளுக்கு யூ.டி..ஆர்.சி., பயிற்சி

ஈரோடு: கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (யூ.டி.ஆர்.சி), "லாபம் தரும் வெண்பன்றி வளர்ப்பு' குறித்த பயிற்சி முகாம், ஈரோட்டில் நேற்று நடந்தது. உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், யசோதை, கவிதா ஆகியோர் பேசியதாவது: நம் நாட்டில், பல்வேறு வகையான கால்நடை வளர்ப்பு தொழில் உள்ளது. அதில், வென்பன்றி வளர்ப்பு தொழில், கிராமப்புற விவசாயிகளுக்கு, பொருளாதார மேம்பாட்டுக்கு, மிகவும் உறுதுணையாக உள்ளது. குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் கொடுக்ககூடிய தொழிலாகும். நமக்கு தேவையான இனங்களை, அருகில் இருக்கும் நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரியிலோ அல்லது தனியார் பண்ணைகளிலோ தேர்வு செய்து வாங்குதல் வேண்டும். பெரிய வெள்ளை யார்க்னஷியர், லேண்ட்ரேஸ், ஹேம்ப்ஷையர், பியூராஜ் போன்ற இனங்கள் விவசாயிகளால் ஆர்வமுடன் வளர்க்கப்படுகிறது. ஆண் பன்றிகளை தேர்வு செய்யும் போது, நல்ல உறுதியான கால்கள் உள்ளனவா என்றும், விரைகள் இரண்டு சீராக உள்ளனவா என்றும், 12 முதல், 14 பால் காம்புகள் சிறிய அளவில் உள்ளனவா என பார்க்க வேண்டும். பெண் பன்றிகளை தேர்வு செய்யும் போது, எட்டு மாத வயதில் தேர்வு செய்வதுடன், 12 முதல், 14 பால் காம்புகள் சீரான இடைவெளியில் உள்ளனவா என்றும், பிறக்கும் போது, 12 முதல், 15 குட்டிகள் உடன் பிறந்தனவா என பார்த்து வாங்க வேண்டும்.

மேலும், உணர்ச்சி வசப்படும் மற்றும் சண்டையிடும் பன்றிகளை வாங்குவதை தவிர்த்தல் வேண்டும். இனப்பெருக்க காலத்தில், பின் கால்களின் மேல் பகுதியான முதுகு பகுதியில்

கைவைத்து அழுத்தும்போது, அழுத்தத்தை ஏற்றுக்கொண்டு அசையாமல் இருக்குமானால், பெண் பன்றியானது பருவத்தில் உள்ளது, என்று உறுதி செய்து கொள்ளலாம். சினைப்பருவமானது மூன்று மாதம், மூன்று வாரம், மூன்று நாட்கள் ஆகும். இவ்வாறு அவர்கள் பேசினர்.

### கால்நடைகளை வளர்க்க முடியாமல் பந்துவார்பட்டி விவசாயிகள் தவிப்பு

தேனி : தேனி அருகே உள்ள பந்துவார்பட்டியில், கால்நடைகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். தேனி அருகே உள்ள பந்துவார்பட்டியில் கால்நடை வளர்ப்பே முக்கிய தொழில். வீடு தோறும், ஆடு, மாடு, கோழிகளை வளர்க்கின்றனர். இங்கு சப்ளை செய்யப்படும் குடிநீர் வீடுகளுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. கால்நடைகளுக்கு போதவில்லை. சுற்றிலும் விவசாய நிலங்களாக இருப்பதால், கால்நடைகளை மேய்ச்சலுக்கும், குடிநீருக்கும் அனுமதிப்பதில்லை. இதனால் கால்நடைகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். பந்துவார்பட்டியை சேர்ந்த மணிமேகலை கூறுகையில், "குழாயில் வரும் நீரை தொட்டிகளில் பிடித்து வைத்திருந்தால், சுகாதாரத்துறை அனுமதிப்பதில்லை. கொசுக்கள் உருவாகி விடும் எனக் கருதி, கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை ஊற்றி விடுகின்றனர். அதன் பின்னர் இந்த நீரை கால்நடைகளுக்கு கொடுக்க முடியவில்லை. போர்வெல் போட்டு குடிநீர் சப்ளை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் போர்வெல் அமைக்கவில்லை. அமைத்து கொடுத்தால் இதில் கிடைக்கும் நீரை கால்நடைகளை வளர்க்க பொதுமக்கள் பயன்படுத்துவார்கள், என்றார்.

### விவசாயிகள் கவனத்திற்கு

திருவாடானை :திருவாடானை தாலுகாவில் உழவு பணிகள் முடிந்த நிலையில் விதைப்புப்பணி துவங்க உள்ளது. கடைகளில், விதை நெல் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. வியாபாரிகள் கூறுகையில், ""130 நாட்களில் விளையக்கூடிய பி.பி,டி., 120 நாளில் விளையும் என்.எல், ஆர், 110 நாளில் விளையும் ஜே.சி.எல், 105 நாளில் விளையும் ஏ.டி.டி, (ஆர்), 115 நாளில் விளையும் ஏ.டி.டி. ஆகிய நெல் ரகங்கள் உள்ளன. மழை இல்லாததால் தேக்கமடைந்துள்ளன," என்றனர். வேளாண்மை அதிகாரி கதிரவன் கூறுகையில், ""140 நாளில் விளையக்கூடிய டீலக்ஸ் மட்டும் விற்பனைக்கு வந்துள்ளது," என்றார்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேரன்மகாதேவி : அம்பாசமுத்திரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை 13ம் தேதி நடக்கிறது. விவசாயிகள் கலந்துகொண்டு பயனடையும்படி சேரன்மகாதேவி சப்-கலெக்டர் ரோகிணி ராம்தாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:- அம்பாசமுத்திரம் புதுகிராமம் தெருவில் உள்ள ஸ்ரீனிவாச கல்யாணமண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் சேரன்மகாதேவி கோட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், நான்குநேரி, ராதாபுரம் வட்டத்தை சேர்ந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் திட்டம் சேரன்மகாதேவி சப்-கலெக்டர் தலைமையில் நடக்கஉள்ளது. மேற்படி கூட்டத்தில் அனைத்து அரசுதுறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர். எனவே அம்பாசமுத்திரம், நான்குநேரி, ராதாபுரம் வட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டு பயனடையுமாறு சப்-கலெக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தக்காளி விலை வீழ்ச்சி: அறுவடை செய்யாமல் செடியிலே கருகும் அவலம்

பாவூர்சத்திரம் : பாவூர்சத்திரத்தில் தக்காளி விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் தக்காளியை அறுவடை செய்யாமல் தோட்டத்திலேயே கருகிவிடும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. நெல்லை மாவட்டம் பாவூர்சத்திரம், கீழ்ப்பாவூர், குறும்பல ◌ாப்பேரி, ஆவுடை யானூர், மேல ப்பாவூர், திப்பணம்பட்டி, பெத்தந ◌ாடர்பட்டி, மடத்தூர், பட்டமுடையார்புரம், ராஜபாண்டி ஆகிய பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் தக்காளி பயிர் செய்திருந்தனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கு விற்கப்பட்டது. பின்னர் படிப்படியாக சரிந்து ஒரு கிலோ ரூ.2க்கும், 3க்கும் விற்கப்பட்டது. காய்கறி மார்க்கெட்டிற்கு கொண்டுவரப்பட்ட தக்காளி பழத்தை வியாபாரிகள் வாங்குவதற்கு அதிக அக்கறை காட்டாததால் காய்கறி மார்க்கெட்டிலேயே இருப்பு வைக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இவ்வாறு இருப்பு வைக்கப்பட்ட தக்காளி பழங்கள் அழுகி சேதம் அடைந்தது. இதனால் வெறுப்படைந்த விவசாயிகள் பலர் தக்காளிபழத்தை அறுவடைசெய்து மார்க்கெட்டிற்கு கொண்டுசெல்வதற்கு ஆகும் செலவைவிட குறைவான விலைக்கே தக்காளி விற்கப்பட்டதால் தக்காளிபழத்தை பறிக்காமல் செடியிலேயே விட்டுவிட்டனர். ஒருசில விவசாயிகள் நஷ்டம் ஏற்படுவதால் தக்காளி செடிக்கு தண்ணீர் பாய்ச்சுவதையே நிறுத்திவிட்டனர். இதனால் காய்கறி மார்க்கெட்டிற்கு தக்காளியின் வரத்து வெகுவாக குறைந்துவிட்டது. இந்நிலையில் நேற்று பாவூர்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி சிறிது விலை உயர்ந்து ரூ.7க்கு

விற்கப்பட்டது. பாவூர்சத்திரம் பகுதியில் தக்காளி பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காததால் விவசாயிகள் பெரும் கவலைஅடைந்துள்ளனர். தக்காளி விவசாயி ராமர் கூறியதாவது:-தக்காளி விலை விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற விலை ஏற்றத்தாழ்வு இல்லாத வண்ணம் விவசாயிகளுக்கு விளைவித்த பொருட்களுக்கு பாதுகாப்பு அளிக்க விவசாய பொருட்கள் பாதுகாப்பு கிட்டங்கியை அமைக்க அரசு முன்வரவேண்டும் என்று கூறினார்.

## பெருந்துறை வேளாண்மை சங்கத்தில் ரூ.22 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை

பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. பெருந்துறை மற்றும் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த உற்பத்தியாளர்கள் 868 மூட்டைகளில் 42 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்கள் கொண்டு வந்திருந்தார்கள்.

முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ 54 ரூபாய் 40 காசு முதல் 56 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ 32 ரூபாய் 85 காசு முதல் 52 ரூபாய் 75 காசு வரை ஏலம் போனது. கடந்த வாரத்தை போலவே விலையில் மாற்றம் இல்லாமல் இருந்தது. மொத்தம் ரூ.22 லட்சத்துக்கு விற்பனையானது.

தினகரன்

## ராயக்கோட்டை சந்தையில் தக்காளி விலை உயர்வு 25 கிலோ கூடை ரூ.400



ராயக்கோட்டை : ராயக்கோட்டை சந்தையில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. கூடை 400 ரூபாயாக அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தக்காளி சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளியை மொத்தமாக ராயக்கோட்டையில் உள்ள மண்டிகளுக்கு கொண்டு வந்து ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. பின்னர், அவற்றை சென்னை, கோவை, சேலம், திருச்சி, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இந்நிலையில், வரத்து குறைந்துள்ள நிலையில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. நேற்று நடைபெற்ற ஏலத்திற்கு 10 ஆயிரம் கூடை தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. கிலோ ரூ.16 என்ற விலையில் 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.400க்கு ஏலம் போனது. ஆக மொத்தம் நேற்று ஒரே நாளில் 250 டன் தக்காளி விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ.40 லட்சம் ரூபாய் வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: ராயக்கோட்டை பகுதியில் தொடர் மழை காரணமாக தக்காளி அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து முகூர்த்த நாட்கள் வருவதையொட்டி வியாபாரிகள் வரத்து குறையாத நிலையில், தக்காளி வரத்து

சரிந்துள்ளதால் தேவை அதிகரித்துள்ளது. இதனால், கடந்த வாரம் 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி, தற்போது 400 ரூபாயாக உயர்ந்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## உருளைக்கிழங்கு சாகுபடி பயிற்சி

ஊட்டி: உருளைக்கிழங்கு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து ஊட்டி அருகே கல்லக்கொரை கிராம விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஊட்டி அருகே கல்லக்கொரை கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை வட்டத்தின்(அட்மா) விவசாயிகளுக்கான செயல்முறையுடன் கூடிய பயிற்சி நடந்தது. முகாமில், முத்தோரையில் உள்ள மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலைய தொழில்நுட்பட அலுவலர் ராஜேந்திரன், உருளைக்கிழங்கு சாகுபடி தொழில்நுட்பம், விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னை, பின்பருவ இலை கருகல் நோய் மற்றும் அதன் அறிகுறிகள், நோய் மேலாண்மை வழிமுறை, பூச்சிக்கொல்லி, பூஞ்சான் தெளிப்பதில் உள்ள தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்தனர். மேலும், வெள்ளை புழுக்களை கட்டுப்படுத்த உயிரியல் கட்டுப்பாட்டு முறை, நுண்ணுயிர் பயன்பாடுகள் குறித்து அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ரம்யா விளக்கினார். அட்மா திட்ட செயல் பாடு மற்றும் தோட்டக்கலை துறையின் புதிய திட்டமான பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம் மூலம் எவ்வாறு காய்கறி உற்பத்தி செய்கிற விவசாயிகள் குழு அமைத்து பயன் பெறலாம் எனபது குறித்து ஜான்பாஸ்கோ எடுத்துரைத்தார். மண் மாதரி எடுப்பதன் அவசியம், அதை எடுக்கும் வழிமுறை குறித்து தொழில் நுட்ப வல்லுநர் அஸ்வினி பயிற்சி அளித்தார். முன்ன தாக உருளைக்கிழங்கு சாகுபடியாளர் சங்க உபதலை வர் நந்தியய்யா தலைமை வகித்தார். உழவர் நண்பர் நடராஜ், உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ணன், அட்மா திட்ட அலுவலர் கள், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் என 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## வாழைத்தார் விலை உயர்வு

பொள்ளாச்சி,: பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் மற்றும் தேர்நிலை மார்க்கெட்டுகளில் வாரத்தில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழை த்தார் ஏலம் நடைபெறும். ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், பொன்னாபுரம் மற்றும் திருச்சி, தூத்துக்குடி உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும் அதிகளவு வாழைத்தார்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதில், செவ்வ £ழை, கர்ப்பூரவள்ளி, ரஸ்தாளி, பூவந்தார், நேந்திரன் உள்ளிட்ட வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகிறன. கடந்த ஒரு மாதத்திற்கு

முன்பு உள்ளூர் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும் வாழைத்தார் வரத்து அதிகமாக இருந்தது. 1500 முதல் 2000 வாழைத்தார்கள் வரை குவிந்தன. இம்மாதம் கடந்த இரண்டு வாரங்களாக மார்க்கெட்டுக்கு வாழை த்தார் வரத்து குறைந்துள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து வாழைத்தார் வரத்து இல்லாததால் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது. நேற்று காந்தி மார்க்கெட்டுக்கு சுமார் 500 முதல் 800 வாழைத்தார்களே வரப்பெற்றன. இருக்கின்ற வாழைத்தாரை உள்ளூர் பகுதி வியாபாரிகளே வாங்கி சென்றனர். வரத்து குறைவால் விலை கடுமையாக உயர்ந்திருந்தன. கடந்த மாதம் ரூ.500 முதல் ரூ.650 வரை ஏலம்போனது. இப்போது ரூ.950 வரை விலை போனது. ரூ.400க்கு விற்பனையான கர்ப்பூரவள்ளி இப்போது ரூ.650க்கும், பூவந்தார் ரூ.460க்கும், கேரள ரஸ்தாளி ரூ.550க்கும், நேந்திரன் ஒரு கிலோ ரூ.43 என அதிக விலைக்கு ஏலம் போனது.

## பருவமழை தீவிரம் நெல் நாற்று நடும் பணி துவங்கியது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை தீவிரமடைய தொடங்கியதை அடுத்து, நெல் நாற்று நடவு பணிகள் துவங்கியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, மஞ்சள் ஆகியவை முக்கிய சாகுபடி பயிர்களாக உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிர் செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் 24 ஆயிரம் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக தர்மபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களில் அதிகளவில் நெல் பயிரிடப்படுகிறது. கடந்த ஆண்டில் மழையின்றி ஏற்பட்ட வறட்சி காரணமாக, நெல் சாகுபடி முற்றிலும் பாதித்தது. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. நடப்பாண்டிலும், தென்மேற்கு பருவமழை போதிய அளவிற்கு பெய்யவில்லை. இதனால் ஏமாற்றமடைந்திருந்த விவசாயிகள், வடகிழக்கு பருவமழையை பெரிதும் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் தர்மபு£¤ மாவட்டத்தில், கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், ஏரிகள் மற்றும் விவசாய கிணறுகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. இதையடுத்து நெல் நாற்று நடவு பணிகளில் விவசாயிகள் ஈடுபட தொடங்கியுள்ளனர். தர்மபுரிபென்னாகரம் சாலையில் அதகபாடி கிராமத்தில் நெல் நாற்று நடும் பணி தொடங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழை நீடிக்கும் பட்சத்தில், நடப்பாண்டு நெல் சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை தீவிரத்தால் நிரம்பி வரும் அணைகள்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால், அணைகளின் நீர்மட்டம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் ராமாக்காள் ஏரி, செட்டிக்கரை ஏரி, ரெட்ரி ஏரி, நார்த்தம்பட்டி ஏரி, லளிகம் ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி, பைசுஅள்ளி ஏரி, சோகத்தூர் ஏரி உள்பட 73 ஏரிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் 634 ஏரி, குளங்களும் உள்ளன. இவை தானாக நிரம்பும் ஏரி, மழை பெய்து ஆறுகள் வழியாக நிரம்பும் ஏரிகள் என இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை பெய்யத்துவங்கி விட்டதால் கேசரிகுலஅள்ளி, தொப்பையாறு, வாணியாறு, வரட்டாறு, பஞ்சப்பள்ளி, நாகாவதி உள்ளிட்ட அணைகளிலும், அனைத்து ஏரிகளிலும் நீர் வரத்து அதிகரித்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக, கேசரிகுலஅள்ளி அணையில் 5.74 அடி, தொப்பையாறு அணையில் 21.15 அடி, வாணியாறு அணையில் 13.45 அடி, சின்னாறு அணையில் 7.46 அடி, வரட்டாறு அணையில் 4.26 அடி மற்றும் நாகாவதி அணையில் 8.25 அடி உயரத்திற்கு நீர் தேங்கியுள்ளது.

## தொடர் மழையால் வரத்து சரிவு கொத்தமல்லி விலை உயர்வு

சூளகிரி, : சூளகிரி சந்தைக்கு வரத்து குறைந்ததால் கொத்தமல்லி தழை விலை உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி பகுதியில் சாகுபடி செய்யப்படும் கொத்தமல்லி தழைகளுக்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. நல்ல மணம், பசுமையின் காரணமாக ஓட்டல் கடைகள் மற்றும் வீடுகளில் அதிகளவில் பயன்படுத்தி வருவதால் ஆண்டு முழுவதும் சூளகிரி சந்தையில் கொத்தமல்லி தழை விற்பனை களை கட்டுகிறது. இங்கிருந்து சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட இடங்களுக்கும், கர்நாடகம், ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் கொத்தமல்லி தழை அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையின் காரணமாக கொத்தமல்லி மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், சூளகிரி சந்தைக்கு வரத்து சரிந்துள்ளது. கடந்த வாரங்களில் நாள் ஒன்றுக்கு 10 டன் கொத்தமல்லி தழை விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. நேற்று நடைபெற்ற சந்தையில் 7 டன்னாக குறைந்தது. வரத்து சரிவால் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஒரு கட்டு கொத்தமல்லி தழை ஞ்4 முதல் ஞ்5 வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று நடைபெற்ற

சந்தையில் ஒரு கட்டு கொத்தமல்லி தழை 7 ரூபாயாக அதிகரித்தது. இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: சூளகிரி பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் கொத்தமல்லி சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. பரவலாக பெய்து வரும் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால், தண்டு பகுதியில் அழுகல் ஏற்படுகிறது. மேலும், நிரம்மாறி காணப்படுவதால் வரத்து சரிந்துள்ளது. மழை நீடித்தால் தற்போதைய வரத்தும் பாதியாக சரியும். இதனால், மேலும் விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

## பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க பயனுள்ள ஆலோசனை

சிவகங்கை, : வறட்சி காலத்தில் நெற்பயிரை பாதுகாக்க பூசா ஹைட்ரோ ஜெல் தொழில்நுட்ப முறையை பயன்படுத்த வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை கூறியதாவது, ‘நெற்பயிர் செய்துள்ள விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ பூசா ஜெல்லை 10 கிலோ மண் அல்லது எருவுடன் கலந்து வயலில் தூவ வேண்டும். இதனால் மண்ணின் நீர்ப்பிடிப்பு திறன் அதிகரிப்பதுடன் வறட்சி காலங்களில் நீர்த்தேவை குறைகிறது. நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். மாவட்டத்தில் தேவகோட்டை, சாக்கோட்டை, கண்ணங்குடி, காளையார்கோவில், இளையான்குடி வட்டாரங்களில் பிபிஎப்எம் என்ற தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தபட்டுள்ளது. வளர்ச்சிப்பருவம், பொதி கட்டும் பருவ நிலையில் ஏக்கருக்கு 200 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் வளர்ச்சி, பச்சயம் அளவு அதிகரிக்கும். பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவ காலம் துரிதமாகும். நெல் மணி எடையும், 10சதவீத கூடுதல் மகசூலும் கிடைக்கும். வறட்சியினை தாங்கக்கூடியது. இந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குநர்களை அணுகவும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க பயனுள்ள ஆலோசனை

சிவகங்கை, : வறட்சி காலத்தில் நெற்பயிரை பாதுகாக்க பூசா ஹைட்ரோ ஜெல் தொழில்நுட்ப முறையை பயன்படுத்த வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை கூறியதாவது, ‘நெற்பயிர் செய்துள்ள விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ பூசா ஜெல்லை 10 கிலோ மண் அல்லது எருவுடன் கலந்து வயலில் தூவ வேண்டும். இதனால் மண்ணின்

நீர்ப்பிடிப்பு திறன் அதிகரிப்பதுடன் வறட்சி காலங்களில் நீர்த்தேவை குறைகிறது. நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். மாவட்டத்தில் தேவகோட்டை, சாக்கோட்டை, கண்ணங்குடி, காளையார்கோவில், இளையான்குடி வட்டாரங்களில் பிபிஎப்எம் என்ற தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தபட்டுள்ளது. வளர்ச்சிப்பருவம், பொதி கட்டும் பருவ நிலையில் ஏக்கருக்கு 200 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் வளர்ச்சி, பச்சயம் அளவு அதிகரிக்கும். பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவ காலம் துரிதமாகும். நெல் மணி எடையும், 10சதவீத கூடுதல் மகசூலும் கிடைக்கும். வறட்சியினை தாங்கக்கூடியது. இந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குநர்களை அணுகவும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மழை பெய்யும் காலங்களில் கால்நடைகளை நோயின்றி காக்கும் வழிமுறைகள்

சிவகங்கை, : மழைக்காலங்களில் கால்நடைகளை நோயின்றி காக்கும் வழிமுறைகள் குறித்து கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் ஆலோசனை வழங்கியுள்ளது. மழைக்காலங்களில் சில தொற்று நோய்களால் கால்நடைகள் பாதிப்படைகின்றன. அவற்றில் தொண்டை அடைப்பான், சப்பை நோய், ஆடுகளில் துள்ளுமாரி நோய் குறிப்பிடத்தக்கவை. சப்பை நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் கால்களை தரையில் ஊன்ற முடியாமல் நொண்டியபடி நடக்கும். சில நேரங்களில் முன்சப்பை அல்லது பின் சப்பையில் வீக்கம் ஏற்பட்டு இறக்கும். இதைத்தவிர்க்க மழைக்காலம் துவங்குவதற்கு முன்னால் தடுப்பூசி போட வேண்டும். ஆடுகளுக்கு இக்காலங்களில் துள்ளுமாரி நோய் ஏற்படும். இந்நோய் கண்ட ஆடுகளுக்கு மருத்துவ சிகிச்சை பலன் அளிப்பது இல்லை. இதனால் நல்ல திடகாத்திரமான ஆடுகள் கூட பாதிப்புக்குள்ளாகின்றன. தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம். 3 மாத வயதுக்கு மேற்பட்ட குட்டிகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். மழைக்காலங்களிலும், வரும் குளிர்காலத்திலும் கன்றுகள் இறப்பு ஏற்படலாம். மழைக்காலங்களில் கன்றுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் வைட்டமின் ‘ஏ’ சத்தை தீவனத்துடன் கொடுக்கலாம். அல்லது மருத்துவரின் ஆலோசனையின்படி ஊசி மூலம் செலுத்தலாம். மழைக்காலங்களில் கன்று இறப்பைக் குறைத்திட மாட்டுத் தொழுவங்களை தண்ணீர் தேங்காதபடி மேடான இடத்தில் அமைக்க வேண்டும். அவ்வப்போது சாணம், சிறுநீர் போன்ற கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும். தக்க நடவடிக்கைகளை மழைக்காலம் தொடங்கும் முன் நடைமுறைப் படுத்தினால் கால்நடைகளை நோயிலிருந்து பாதுகாத்து பொருளாதார இழப்பை தவிர்த்து கால்நடை வளர்ப்பில் லாபம் காணலாம்.

## பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

கரூர், : கரூர் கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதி உதவி அளித்தல், விவசாயத்தில் முற்போக்கான நவீன தொழில் நுட்பங்கள் வேளாண் வழிமுறைகள் மற்றும் அதிக விலையுள்ள இடுபொருட்கள் உபயோகப்படுத்த ஊக்கமளித்தல். பண்ணை வருமானத்தை நிலைப்படுத்துதல், உணவு மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் உற்பத்தியை பெருக்குதல் மற்றும் ஊக்கமளித்தலை நோக்கமாக கொண்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய் யும் அனைத்து விவசாயிகளுக்கும் (குத்தகைக்குவிடு வோர் உள்பட) இத்திட்டத் தில் சேரலாம். பயிர்கடன் பெறுபவர்கள்- கட்டாயத்தின் அடிப்படையில், பயிர்க்கடன் பெறாதவர் கள்- விருப்பத்தின் அடிப்படையில் சேரலாம். பயிர்க்கடன் வரை குறைந்தபட்ச காப்பீடு. கடன்பெறுபவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் உத்தரவாத மகசூலின் மதிப்பீடு வரை காப்பீடு செய்துகொள்ளலாம். விவசாயிகள் தங்கள் விருப்பத்தின்பேரிலும், கூடுதலாக காப்பீட்டுத் தொகை செலுத்தி சராசரி மகசூலின் 150சதவீத மதிப்பு வரை காப்பீடு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்வதற்காக பயிர்க்கடன் வாங்கும் விவசாயிகள் தாங்கள் கடன் வாங்கும் வங்கியிலேயே கட்டாயமாக பயிர்க்காப்பீடு செய்யப்படுவர். பயிர்க்கடன் வாங்காத ஏனைய விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் அல்லது பொதுத்துறை வங்கிகளில் தாங்கள் விருப்பத்தின்பேரில் காப்பீடு செய்துகொள்ளலாம். பயிர்வாரியாக ஏக்கருக்கு செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை- நெல் சம்பா காப்பீட்டுத்தொகை ரூ.12944. செலுத்த வேண்டிய பிரிமி யம் சதவீதம் 2. மொத்த தொகை ரூ.259, மானியம்போக கடன் பெறுவோர் செலுத்தவேண்டிய பிரிமியத்தொகை ரூ.129, கடன்பெறா விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தொகை ரூ.116. கம்பு காப்பீடு ரூ.4244, சதவீதம் 3.50, மொத்த பிரிமியம் ரூ149, மானியம் போக கடன்பெறுவோருக்கு ரூ.74, கடன்பெறாதோர் ரூ.67. சோளம் காப்பீட்டுதொகை ரூ.3080, சதவீதம் 2.50, மொத்தம் 77, மானியம்போக கடன்பெறுவோருக்கு ரூ.39, கடன்பெறாதோருக்கு ரூ.35. மக்காச்சோளம் காப் பீட்டு தொகை ரூ.10284, சதவீதம் 2.50, மொத்தம் ரூ.257, மானியம்பெறுவோருக்கு ரூ.129, கடன்பெறாதோருக்கு ரூ,116, நிலக்கடலை காப்பீட்டுத்தொகை ரூ.15380, பிரிமியம் சதவீதம் 3.50, மொத்த தொகை ரூ.538, கடன்பெறுவோர் ரூ.269, கடன்பெறாதோர் ரூ.242. எள்- காப்பீட்டுத்தொகை ரூ.4520, பிரியமியம்சதவீதம் 3.50, மொத்தம் ரூ.158,

கடன்பெறுவோர் ரூ.79, பெறாதோர் ரூ.71, சூரியகாந்தி காப்பீட்டுத்தொகை ரூ.17080, சதவீதம் 3.50, மொததம் ரூ.598, மானியம்பெறுவோர் ரூ.299, பெறாதோர் ரூ.269, மஞ்சள் காப்பீட்டுதொகை ரூ.141852. பிரிமியம் சதவீதம் 9.60, தொகை மொத்தம் ரூ.13618, மானியம்பெறுவோர் ரூ.6809, பெறாதோர் ரூ.6128, வாழை காப்பீட்டுதொகை ரூ.222512, சதவீதம் 7.80, மொத்தம் ரூ.17,356, கடன்பெறுவோர் ரூ.8678, பெறாதோர் ரூ.7810. பிர்க்கா அளவில் அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்கள் மற்றும் பயிர்கள் வட்டார அளவில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பயிர்கள் விபரங்களை தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி தெரிந்துகொள்ளலாம். அனைத்து விவசாயிகளும் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடையவேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்

தேனி, : தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என தேனி மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தேனி மாவட்டம் விவசாயம் சார்ந்த பகுதியாகும். இங்கு நெல், கரும்பு, மா, தென்னை, வாழை, திராட்சை, கொடி முந்திரி, கொட்டை முந்திரி உள்ளிட்ட பல்வேறு பழங்கள், தானியங்கள் விவசாயம் நடக்கிறது. பணப்பயிர்களான மிளகு, ஏலம், கிராம்பு, மஞ்சள் விளைச்சலும், தேயிலை, காப்பி மற்றும் காய்கனிகளாள தக்காளி, மிளகாய், கத்தரிக்காய், வெங்காயம், காலிபிளவர், நூல்கோல் உள்ளிட்ட விளைச்சலும் தேனி மாவட்டத்தில் நடக்கிறது. இம்மாவட்டத்தில், மா 9 ஆயிரத்து 123 ஹெக்டேரிலும், தென்னை 18 ஆயிரத்து 173 ஹெக்டேரிலும், முந்திரி 5 ஆயிரத்து 913 ஹெக்டேரிலும், இலவ மரங்கள் 4 ஆயிரத்து 304 ஹெக்டேரிலும், காபி 3 ஆயிரத்து 666 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இது தவிர இதர காய்கறிகள் மற்றும் பழ வகைகள், பூக்கள் விளைவிக்கப்படுகின்றன. மூலிகைபயிர்கள், வாசனை பயிர்கள், நறுமணப்பயிர்கள், பூக்கள் மற்றும் காய்கறிகள் தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பல ஆண்டுகாலமாக செயல்பட்டு வருகிறது. இது தவிர வைகை அணைப்பகுதியில், 50 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை நாற்றுப்பண்ணையும், விதை நாற்றுப்பண்ணையும் செயல்பட்டு வருகிறது. விவசாயத்திற்கேற்ற நீர் வசதி மற்றும் பருவமழை காலநிலைகள் சீராக தேனி மாவட்டத்தில் உள்ளதால், விவசாயம் சிறப்பாக உள்ளது. தமிழக அரசு தோட்டக்கலை பல்கலைக் கழகத்தை தேனி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என நீண்ட காலமாக விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

## தேங்காய் விலை உயருமா?

விருதுநகர், : நடப்பு மாதத்தில் தேங்காய் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே இதனடிப்படையில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுத்துக் கொள்ளும்படி வேளா ண்மை துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) செல்வராஜ் தெரிவித்துள்ளார். உணவு, பானம், நார், எரிபொருள் உள்ளிட்ட தேவைகளுக்கு தென்னை நம்நாட்டில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா முதலியன தென்னை பயிர்செய்யும் முக்கிய நாடுகள் ஆகும். இந்தியாவில் தென்னை உற்பத்தியில் கேரளா முதல் இடத்திலும், அதனைத் தொடர்ந்து தமிழகமும் பங்களிக்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் எக்டேர் பரப்பில் தென்னந்தோப்புகள் உள்ளன. தேங்காயின் மொத்த உற்பத்தியில் 65 முதல் 70 சதவீதம் எண்ணெய்க்காக பயன்படுத்தப்படுகிறது. தெ ன்னை மற்றும் கொப்பரையின் விலை, தேங்காய் எண்ணெயின் விலையைப் பொறுத்தே அமையும். வர்த்தக மூலகங்களின் படி இப்பருவதில் உற்பத்தி 30 சதவீதம் குறைந்துள்ளது. கர்நாடகாவில் இருந்து தேங்காய் வரத்து தொடங்கியுள்ளது. தற்போது அரசு கொப்பரை கிலோ ஒன்றி ற்கு ரூ.52.50க்கு கொள்முதல் செய்து வருகிறது. மொத்த சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை கிலோவிற்கு ரூ.63ம், கொப்பரை கிலோவிற்கு ரூ.45ம், தேங்காய் கிலோ ஒன்றிற்கு ரூ.10 முதல் ரூ.12க்கும் விற்பனை ஆகிறது. இச்சூழ்நிலையில் விவசாயிகள் அடுத்த மாதம் தேங்காய் மற்றும் கொப் பரை விலை என்ன வாக இருக்கும் என தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர். தமிழ்நாடு வேளாண் மை பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையமானது, பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துரை சந்தையில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை களை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி இம்மாதம் தேங்காய் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று தெரியவந்துள்ளது. இதன்படி தேங்காய் கிலோ ஒன்றிற்கு ரூ.12-14 வரையிலும், கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.50 ஆகவும் இருக்க வாய்ப்புள்ளது. இந்த தகவலின் அடிப்படையில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுத்துக் கொள்ளும்படி வேளா ண்மை துணை இயக்குநர்(வேளாண் வணி கம்) செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கும் விழா

நாகர்கோவில்: ஆரல்வாய்மொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் பெருமக்களுக்கு கடனுதவி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பச்சைமால் கலந்து கொண்டு கடனுதவிகளை வழங்கினார். இதில் 25 வேளாண் பெருமக்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் 25 லட்சம் மதிப்பிலான கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு கடனுதவிகளை அமைச்சர் பச்சைமால் வழங்கினார். விழாவில் துணைத்தலை வர் சுதாபாலகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் பரமசுந்தரராஜ், ஆரல்வாய்மொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் கிருஷ்ணகுமார், செய லாளர் சகாய திலகராஜ், பேரூராட்சி தலைவர் பத்மாவதி நாகபாலகிருஷ் ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தாணுப்பிள்ளை, வழக்கறிஞர் சிவசெல்வராஜன், காரவிளை செல்வன், ராஜன் உள்பட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பாசன வாய்க்கால்களில் தடுப்பு கட்டை அமைப்பு

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு விவசாய நிலங்கள் அதிக பரப்பில் காணப்படுகிறது. மேட்டூரில் இருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் கூலி உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டனர். நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களுக்கு சிலர் தண்ணீர் பாய்ச்சி மருந்து தெளிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். இங்குள்ள பாசன வாய்க்கால்களில் விவசாயிகள் தண்ணீர் தேக்குவதற்கு ஏதுவாக பாசன தடுப்பு கட்டைகள் போதுமான அளவில் இல்லாததால் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். தண்ணீர் தேக்க இயலாமல் விவசாயிகள் தாங்களாகவே சாக்கு பைகளில் மணல் மூட்டைகளை நிரப்பி வாய்க்காலின் குறுக்கே அடுக்கி வைத்து தண்ணீரை பாய்ச்சும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் பொதுப் பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை சார்பில் தடுப்பு கட்டைகள் பாசன வாய்க்காலில் அமைக்கப் படுவது வழக்கம். இந்த பணிகள் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெறவில்லை. இதன் காரணமாக மேடான பகுதிகளில் விளை நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்ச இயலாமல் உள்ளனர். ஆகவே வரும் காலங்களில் விவசாயிகள் நலன் கருதி தடுப்பு கட்டைகளை பல்வேறு இடங்களில் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்படுகிறது.

## இயந்திர நடவில் இயற்கை விவசாயம் ரசாயனம் கலக்காத நெல் சாகுபடியில் ஆர்வம் களியனூர் விவசாயி தீவிரம்

பள்ளிபாளையம், : பள்ளிபாளையம் அருகே உள்ள களியனூரை சேர்ந்த விவசாயி மூர்த்தி. முன்னோடி விவசாயிகளில் ஒருவரான இவர் வேளாண் துறையின் ஆத்மா பண்ணை குழுவில் இணைந்து இயற்கை விவசாயம் குறித்த பயிற்சிகளை பெற்றுள்ளார். கடந்த மூன்று வருடங்களாகவே இயற்கை விவசாய முறைகளை கடைபிடித்து வருகிறார். இந்த ஆண்டு நடவு இயந்திரத்தை பயன்படுத்தி ஐந்து ஏக்கர் பரப்பளவிலும் சீரான நெல் நடவினை மேற்கொண்டு ரசாயனம் பூச்சு கொல்லி மருந்துகள் எதையும் பயன்படுத்தாமல் முற்றிலும் இயற்கை முறையில் விவசாயம் செய்ய முனைந்துள்ளார். மூலிகை பூச்சு விரட்டி, பஞ்சகாவ்யா போன்ற இயற்கை கரைசல்களை தயாரிக்க புதியதாக இரண்டு பசுமாடுகளையும் வாங்கி நெல் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகிறார். பள்ளிபாளையம் பகுதியில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதில் விவசாயிகள் போதிய விழிப்புணர்வு பெறவில்லை. இதனால் தொடர்ந்து கூலி ஆட்களையே பயன்படுத்தி விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் ஆட்கள் பற்றாக்குறை ஏற்படும். அதை சமாளிக்க விவசாயத்தில் இயந்திரங்களை பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என தெரிவித்த விவசாயி மூர்த்தி, இந்த ஆண்டு பள்ளிபாளையத்தில் இந்திரம் மூலம் நடவு செய்யும் ஒரே விவசாயி என்பது குறிப்பிடத்தக்கது.இதற்காக தற்போது தனது தோட்டத்தில் வேளாண்மைத்துறையினரின் மேற்பார்வையில் பாய் நாற்றங்கால் அமைத்துள்ளார். அடுத்த வாரத்தில் நடவு இயந்திரம் மூலம் நெல் சாகுபடியை துவக்குகிறார். ரசாயனங்களை வயல்களில் கொட்டி விவசாயிகள் உணவை விஷமாக்குவதாக பரவலாக குற்றசாட்டுகள் வீசப்படும் இந்த நேரத்தில் பூச்சிக்கொல்லி உரம் கலப்படமில்லாமல் நூறு சதம் இயற்கை விவசாயம் மேற்கொண்டுள்ள முன்னோடி விவசாயி மூர்த்தியை பாராட்டிய வேளாண்மைத்துறை அதிகாரிகள் இயற்கை விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி உதவுவதாக தெரிவித்துள்ளனர்.

## மீன் வளர்ப்பு பயிற்சி 17ம் தேதி நடக்கிறது

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 17ம் தேதி காலை 9 மணிக்கு கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி நடைபெறுகிறது. வளர்ப்புக்கான கெண்டை மீன் இனங்கள், வளர்ப்புக்கு இடம் தேர்வு செய்தல், மீன் குளம் தயாரிப்பு மற்றும் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல், மீன் வளர்ப்பில் தீவன மேலாண்மை, நீராதர மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் வளர்ப்பு பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், கிராமப்புற பெண்கள், இளைஞர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 16 ம் தேதிக்குள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

## அதிக மகசூல் பெற மண்பரிசோதனை அவசியம் விவசாயிகளுக்கு அறிவுரை

தா.பழூர்: விவசாயத்தில் அதிக மகசூல் பெற விவசாயிகள் மண்பரிசோ தனை செய்வது அவசியம் என்று சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் தாஸிஸ்அருண் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

அரியலுபீர் மாவட்டத்தில் நெல், நிலக்கடலை, முந்திரி, மக்காச்சோளம், கத்திரி, மிளகாய், கரும்பு, பருத்தி, கேழ்வரகு, எள், வாழை என பல்வேறு பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொள்வதில்லை. இதனால் விவசாயிகளுக்கு மகசூல் குறைவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. மண் பரிசோதனை என்பது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளின் அள வுகள் மண்ணில் கார- அமிலநிலை, உப்புகளின் அளவு மற்றும் களர் உவர் போன்ற பிரச்னைகள் ஆகியவற்றை வேதியல் மற்றும் பௌதீக ஆய்வின் மூலம் கண்டறிவதே மண் பரிசோதனையாகும். மண் ஆய்வின் போது மண் மாதிரி சேகரித்தல், சேகரித்த மண்ணை ஆய்வு கூடத்திற்கு உட்படுத்துதல், ஆய்வுக்குப்பின் முடிவு களை கண்டறிந்து பின் பரிந் துரை செய்ய வேண்டும். மேலும் மண்ணின் ரசாயன குணங்களை கண்டறிந்து அதன் வளத்திற்கேற்ப பராமரித்தல், ஆய்வுப்படி தேவையான உரமிட்டு குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுதல், சுற்றுப்புற சூழல் மாசுபடாமல் பாதுகாத்தல், மண்ணிலுள்ள சத்துக்களை அறிந்து பிற பயிர்களுக்கு தேவையான உரமிடுதல் அவசியமாகும். மண்மாதிரி எடுக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை: நிலம் தரிசாக கிடக்கும்போது மண்மாதிரி எடுக்க வேண்டும். உரமிட்டவுடன் சேகரிக்க கூடாது, பயிர்கள் உள்ள நிலங்களில் மண்மா திரி எடுக்க கூடாது. மண்மா திரி சேகரிக்கும் முறையா னது எடுக்க வேண்டிய இடத்தில் புல் இலைசருகுகள் ஆகியவற்றை கையினால் மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். மாதிரி எடுக்கம்போது ‘ க்ஷி ‘ வடிவத்தில் மண் வெட்டியால் வெட்டி அந்த மண்ணை நீக்கி விட வேண்டும். பிறகு மேல் மட்ட பகுதியிலிருந்து கொழு ஆழம் வரை (0-15 செ.மீட்டர் அல்லது 0-23 செ.மீ) ஒரு இன்ச்(அ) 2.5 செ.மீட்டர் பருமனில் மண் மாதிரி சேகரிக்க வேண்டும். இவ்வாறாக குறைந்தபட்சம் ஒரு ஏக்கரில் 10 முதல் 20 இடங்களில் மண்மாதிரி சேகரிக்க வேண்டும். மாதிரிகள் ஈரமாக இருந் தால் அவற்றை நிழலில் உலர வைக்க வேண்டும். சேகரித்த

மாதிரிகளை பிளாஸ்டிக் வாளியில் நன்றாக கலக்கி அதிலிருந்து ஆய்வுக்கு 1-2 கிலோ மண் மாதிரியை கால் குறைப்பு முறையில் பகுத்து எடுக்க வேண்டும். சேகரித்த மண் மாதிரி யை ஒரு சுத்தமான துணிப்பை அல்லது பாலித்தீன் பையில் போட்டு ஆய்வு கூடத்திற்கு அனுப்பும்போது விவசாயிகளின் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், பாசன வசதி, சாகுபடி செய்த பயிர் மற்றும் செய்யப்போகும் பயிர் என முழு விபரங்களை தெரிவித்து அனுப்பவேண்டும். மண் மாதிரி எடுக்கும் ஆழமானது நெல் மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு 6 அங்குலம், 15.செ.மீட்டர், பருத்தி மற்றும் வாழைக்கு 9 அங்குலம் 22.5 செ.மீ என ஆழப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.